
# மூன்றாம் முத்தம்

(குறு நாவல்)




அரியாலையூர்
செல்வி மிஷாந்தி செல்வராஜா

# மூன்றாம் முத்தம்

*(குறு நாவல்)*

*செல்வி. மிஷாந்தி செல்வராஜா*

**வெளியீடு,**
**நாவலர் கலாசார மண்டபம்,**
**யாழ்ப்பாணம்.**
**24.05.2015**

# பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | :- | மூன்றாம் முத்தம் (குறு நாவல்) |
| ஆசிரியர் | :- | செல்வி மிஷாந்தி செல்வராஜா<br>[MA in Tamil, Diploma in Pre – School Education] |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | :- | 66 |
| முதல் பதிப்பு | :- | 2015 |
| பிரதிகள் | :- | 500 |
| அச்சகம் | :- | மதிகலர்ஸ் முத்திரைச் சந்தி, நல்லூர். |
| வெளியீடு | :- | நாவலர் கலாசார மண்டபம்,<br>யாழ்ப்பாணம்.<br>24.05.2015 |
| விலை | :- | 250/= |
| அட்டைப்படம் | :- | செல்வி.ரஜிதா வைகுந்தவாசன்<br>(ஆசிரியர் செல்விபுரம் அ.த.க.பாடசாலை<br>பூநகரி) |

அமரத்துவம் எய்திய என் அம்மம்மாவுக்கு
சமர்ப்பணம்.

(திருமதி.வேலுப்பிள்ளை கனகமணி)

# அணிந்துரை

"கதை சொல்லும் மரபு" மனித வாழ்வியலின் பிரதான அம்சமாக நீண்ட காலமாகவே இருந்துவந்துள்ளது. வாய்மொழி இலக்கியங்களாக இருந்துவந்துள்ள இக்கதைகள் எழுத்தில் பதிப்பிக்கப்படத் தொடங்கியதிலிருந்து வெவ்வேறு நாட்டுப் புராதன கதைகளைப் பல்வேறு நாட்டினரும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கிட்டியது. எனினும், இக்கதை சொல்லும் செயற் பாட்டில் 'புனைவு' இடம்பெறத் தொடங்கியபோது, நவீன இலக்கிய வடிவங்களாக, புனைவை முதன்மைப்படுத்திய 'சிறுகதை', 'நாவல்' என்பன மேலை நாட்டிலிருந்து இறக்குமதியாகி, தமிழ் இலக்கிய மரபிலும் இடம்பிடித்துக்கொண்டன.

சிறுகதை, நாவல் என்பவற்றுக்குத் தனித்தனியே சில இலக் கணங்கள் உண்டு. சிறுகதை என்பது சிறுகச் சொல்லி உயர்பட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதான உரைப்படைப்பு என்றும் பெரும் பாலும் ஒரு மையக்கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத் தினை விபரிக்கும் இலக்கிய வகை என்றும் குறிப்பிடுவர். ஒரு சம் பவத்தின் அடியாகத்தோன்றும் உணர்வு நிலையையோ அல்லது குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் மனோநிலை தொடர்பான அதன் இயக்கத்தையோ இலக்கிய உணர்வுடன் கலாபூர்வமாகச் சித்திரிப் பதற்கேற்ற வடிவமே சிறுகதை என்றும் இத்தகைய உணர்ச்சியை அல்லது மனோ நிலையை வார்த்தைகளால் சுட்டிக்காட்டாது, கதை யைப் படிக்கும் வாசகனின் மனதில் அவன் அறியாமலே அவ்வுணர்வு

நிலை தோன்றும்படி செய்தல் சிறந்த சிறுகதையின் பண்பு என்றும் கூறுவர். சிறுகதை ஒன்றில் ஒருமை விளைவை ஏற்படுத்துவ தோடு, அதன் முடிப்பிலுள்ள திருப்பத்திலும் சிறுகதை ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, காவிய மரபிலிருந்தே நாவல் உருவானது என்றும், காவிய இலக்கணத்தில் பெரிதும் வலியுறுத்தப்படுவது தொகுப்புத்தன்மை என்றும் கூறுவர். மேலும் வாழ்வனுபவங் களைத் தொகுத்து வகைப்படுத்தி வாழ்வின் முழுமையைச் சித்திரிக்க வேண்டிய ஓர் இலக்கிய வடிவமே நாவல் ஆகும். எனவே, நாவலின் நகர்வானது வாழ்வின் அலகுகளை, வலை போல, பல்வேறு திசைகளிலும் பின்னிப் பின்னி விரிவடையச் செய்வதாக இருக்கவேண்டும். இதனாலே தான் நாவலைக் காடு ஒன்றுக்கு ஒப்பிடுவர். 'பெரும் காடு போலத் தழைத்து ஈரமுள்ள நிலமெங்கும் பரவி நிறைந்திருப்பது' ஒரு சிறந்த நாவலின் இலக்கணமாகக் கொள்ளப்படும்.

செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் முதலாம் நாவலான 'மூன்றாவது முத்தம்' என்ற இந்த நாவல், பெரியதொரு நாவலாக விரித்தெழுதப்படக் கூடிய கதை அம்சத்தைக் கொண்டிருக்கின் றது. நாவலின் கூறுகளாகக் கொள்ளப்படும் கதைக்கரு, பாத்திரப் படைப்பு, பின்னணி, மொழிநடை, நோக்குநிலை என்பன கவனத் திற் கொள்ளப்பட்டுள்ளன. யுத்த அனர்த்தம் தோற்றுவித்த வாழ் வின் அவலநிலையில் அடிபட்டுப்போன சமூகத்தின் பதச்சோறாக 'வள்ளியம்மை' சித்திரிக்கப்படுகிறாள். வள்ளியம்மையின் மகளான வித்தியா நெஞ்சில் பல ஏக்கங்களைச் சுமந்து

கொண்டிருப்பவள், கல்வியில் பெரிதும் அக்கறை கொண்டிருப் பவள். எதிர்பாராதவிதமாக காணமற்போன வித்தியாவின் தந்தை யும் அண்ணனும் இவர்களுடன் இணைந்து கொள்கின்ற னர். பந்த பாசங்களில் திளைத்து, வித்தியாவின் குடும்பத்தினர் மகிழ்கின்றனர்.

திடீர் திருப்பங்களைக் கொண்டிருக்கும் இக்கதை, யுத்த அனர்த்தத் தினால் சிதறுண்டு வாழ்ந்துகொண்டிருக்கும் பலர் இதுபோன்ற திருப்பங்களி னூடாக, தமது உறவுகளைச் சந்திப் போம் என்ற எதிர்பார்ப்புடனேயே வாழ்ந்து வருகிறார்கள் என் பதற்கான சாட்சியமாகவே விளங்குகின்றது. யுத்த அனர்த்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு, அவலங்களுக்குள்ளாகி, வாழ்வில் பெருந்துன்பங்களை அனுபவித்து வருவோரும் கூட, நம்பிக்கை யுடன் எதிர்கால வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டியவர் களாகவே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் இக்கதை அமைகிறது யுத்த அனர்த்தத்தில் கணவரை இழந்த வர்களுக்கு மறுமண வாழ்வு அவசிய மானது; நியாயமானது என்பதையும் இக்கதை சுட்டிக்காட்டத்தவறவில்லை.

இந்நாவலின் ஆசிரியை மிஷாந்தி வளர்ந்துவரும் ஓர் எழுத்தாளர். இவரின் ஏக்கங்களும் அபிலாஷைகளும் நியாய மானவை. 'பந்த பாசங்கள் எப்போதும் அழிவதில்லை' என்று உறுதி யாகக்கூறும் மிஷாந்தி, பாரதி கூறுவதுபோல "நினைவு நல்லது வேண்டும்' என இந்நாவலினூடாக எடுத்துக் கூறுகிறார்.

வாழ்த்துக்கள்!

**கலாநிதி த.கலாமணி**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**கல்வியியற்றுறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966


பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

021 222 2870


அறிவாசிச் செய்தி.                                                              24 / 04 /2014

அன்புசார் பெருந்தகையீர்:

தமிழனின் பேச்சு வழக்கு தமிழில் "மூன்றாம் முத்தம்" என்னும் குறு நாவல் வெளிவருவதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இலகு தமிழ் இந்நூல் வெளிவருவது அனைவரும் படித்து புரிந்து கொள்வதற்கு இலகுவானதாகவும் புரிந்துகொள்ளகூடியதுமாக அமைந்திருக்கும் இந்நூலினை வடிவமைத்திருக்கும் நூலாசிரியரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். "மூன்றாம் முத்தம்" எனும் தலைப்பில் வெளிவரும் குறு நாவலானது மனிதனுடைய வாழ்கை வரலாற்றினை எடுத்துக்கூறுவதாக அமைந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. இந்நூலை எழுதிய நூலாசிரியரின் இந்து சமூக நல்லெண்ணம் மென்மேலும் வளர இறைவனுடைய ஆசிகிடைப்பதாக வெளிவரும் இக் குறு நாவலினை அனைவரும் பெற்று படித்து பயன்பெறவும். இந் நூலாசிரியன் சமய, சமூக பணிகள் மென்மேலும் வளர்ச்சியடையவும் அமரத்துவம் எய்திய திருமதி.வேலுப்பிள்ளை கனகமணியின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திப்போம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

[signature]

# CHINMAYA MISSION OF SRI LANKA

SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)

32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344

SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.

web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org


சின்மயா மிஷன்,
இல 09 செட்டித் தெருலேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்
27.04.2015.

## ஆசிச் செய்தி.

"மண்ணிலே, எங்கள் மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்வதற்கு அனைவருக்கும் வழிகாட்டி நிற்கின்ற "மூன்றாம் யுத்தம்" என்னும் குறுந்நாவல் இளம் சிந்தனையுள்ள எழுத்தாளர் செல்வி மதுஷாந்தி செல்வநாதன் அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்படுவது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. சமூகத்திலே காலத்தின் தேவையறிந்து கன்னியமாக கலாசார நெறியிலே வாழ்வின் இலட்சியத்தை அடைந்திட வேண்டும் என்கின்ற உணர்வினை ஏற்படுத்தக் கூடியதாக இக்குறுந்நாவல் அமைந்துள்ளது.

செல்வி மதுஷாந்தியின் அற்புதமான பணி, அனைவரையும் சிந்திக்க தூண்டுகின்ற பணி மென் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனையும் குரு தேவரையும் பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கின்றோம்.

ஓம்
ஜாக்ரத சைதன்யா
சின்மயா மிஷன்
இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
Tel.021 2223447

ஜாக்ரத சைதன்யா
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்.


Resident Acharyas: Br. Darshan Chaitanya, Br. Jagrat Chaitanya and Bramacharini Mahima Chaitanya

Committee: Mr. S. Mahenthiran (President), Mr. S. Balasubramaniam (Vice President), Mr. Lasantha Salgado (Secretary) Mr. M. Gopalakrishnan (Treasurer), Mr. T. Someswaran, Mr. P. Vimalendran, Mrs. M. Mody, Mrs. S. Duraiswamy, Mr. C. Rajadurai, Mr. S. Rajendran, Mr. K. Nadesan, Mr. S. Selvarajah, Ms. S. Sivagnanasunderam, Mr. T. Parthiban, Mr. K. Ketheeswaran, Ms. Sumathy Subramaniyam, Mr. Arun Jeyaprakash, Mr. K. Pirabakaran, Ms. Kala Amirthalingam

## இலங்கை வெளிநாட்டமைச்சு
## இணைப்பாறிய பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

படைப்பாற்றல் என்பது எல்லோருக்கும் கைவரக்கூடிய ஒரு ஆற்றல் அல்ல. படைப்பாற்றல் என்பது வெறுமனே ஒரு ஆற்றல் என்பதையும் தாண்டி மானிடப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஒரு கலைப்படைப்புக்கு பங்களிப்புச் செய்கின்ற ஆற்றலாகவே ஆளுமை மிக்க படைப்பாளிகளினால் எடுத்து இயம்பப்படுகின்றது.

இந்தப்பின்னணியில் செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் கன்னிப்படைப்பான "மூன்றாம் முத்தம்" குறு நாவல் பார்க்கப்பட வேண்டும். கவிதை, சிறுகதை, கட்டுரை என பல்வேறுபட்ட தளங்களிலே தடம் பதித்த படைப்பாளி செல்வி மிஷாந்தியின் இப்படைப்பு மென்மேலும் தமிழ் இலக்கியத்துறையிலே நிமிர்ந்து நிற்க ஆரம்பமாக அமைய வேண்டு மென்பது எனது பேரவா.

அகில இலங்கை ரீதியாகவும் பேசப்படும் சில கலைஞர்கள் அரியாலை கலைமகள் பிரதேசத்தை சொந்தமாக்கியவர்கள் என்பது மிகையான கூற்றல்ல.

செல்வி மிஷாந்தியும் மென்மேலும் தமிழ் இலக்கியத் துறையில் மெருகுபெற்று தாம் வாழும் பிரதேசத்திற்கு புகழ் சேகரிக்க வேண்டும் என்று ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**A.தர்மகுலசிங்கம்**
**இணைப்பாறிய பணிப்பாளர்/**
**இலங்கை வெளிநாட்டமைச்சு,**
**56 கலைமகள் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்**

# வாழ்த்துரை

இலக்கிய வானில் நாளை ஒளியூட்டி பிரகாசிக்கப் போகும் நட்சத் திர எழுத்தாளினியாக திகழப்போகும் அரியாலை யூரைச் சேர்ந்த செல்வி மிஷாந்தி செல்வராஜாவை வாழ்த்து வதில் நான் பெருமை அடைகின்றேன்.

"தோன்றில் புகழொடு தோன்று அஃதில்
தோன்றில் தோன்றாவிடின் நன்று"

இது திருவள்ளுவரின் திருவாக்காகும். இக் குறள் வழி வாழ்ந்து வரும் இளைய தலைமுறையைச்சார்ந்த படைப்பாளி செல்வி மிஷாந்தி செல்வராஜா எழுத்தார்வம் மிக்க துடிப்பான தையலாளாக மிளிர்வது கண்டு களிப்பெய்கின்றேன். யாழ்ப் பாணத்திலிருந்து வெளியாகும் வலம்புரி, உதயன் நாளேட்டில் மிஷாந்தியின் கவிதை, கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதை நான் காண்கின்றேன். இவரின் கைவண்ணங் களை வாசித்து திறன் நிலை கண்டு அவரின் வீடு தேடிச்சென்று பாராட்டி தட்டிக்கொடுத்து ஊக்கமளித்து மகிழ்நிலை கொள் வேன். எந்தவகை செய்திறனிலும் யார் யார் வளர்ச்சி பெற்று வருகின்றார்களோ அவர்களை ஊக்கப்படுத்தி வளர்த்து விடும் உன்னத பணி செய்தல் மூத்தோரின் பெரும் கடமையாகும்.

செல்வி மிஷாந்தி செல்வராஜா அவர்கள் "மூன்றாம் முத்தம்" எனும் தலைப்பில் தான் எழுதிய குறு நாவலை தமது

கன்னி ஆக்கமாக அச்சுப்பதிப் பாக்கமாக வெளியீடு செய்யப் போவதாக என்னை அணுகி அக்கதைப் பிரதியை கையளித்து அது பற்றிய அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டு நின்றார். அவரின் விருப்பத்தை ஏற்று அந்த குறு நாவலை வாசித்துப் பார்த்தேன். செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் கன்னி முயற்சியாக இக் குறு நாவலை கருத்திற் கொண்டு தொடர்ந்து எழுதுவதன் மூலம் உன்னதம் பெற்று சமூகத்துக்கு நல்வளம் சேர்ப்பார் என்ற எதிர்பார்ப்போடு மிஷாந்தி அவர்களுக்கு வாழ்த்துக் கள் கூறி அவரின் எழுத்துப்பணி தொடர கலைமகளின் அருள் பெருக வேண்டுதல் செய்து வாழ்த்தி நிறைவு கொள்கின்றேன்.

**கலாபூசணம். சிவ.சிவநேசன்.**
**"ஆனந்தம்"**
**அரியாலை.**

# என்னுரை

இன்றைய காலகட்டத்தினில் நவீனத்துவங்கள் பல்வகையில் வளர்ந்து நின்றாலும் மனித வாழ்வியலுக்குத்தேவையான அன்பு, பாசம் குடும்ப மட்டங்களிலும், சமூக மட்டங்களிலும் குறைவடைந்து செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எவ்வளவுதான் வசதி வாய்ப்புக்கள் வந்தாலும் நாம் வாழும் வாழ்வின் உறவுகளில் ஆழமான உறவுநிலைகள் தொடர்நிலையாக காணப்படுவதில்லை. சிலவேளைகளில் எமது உறவுகள் பலவீனமானதாக காணப்படுவதால் [A Not Positive Relationship] உறவு முறிவுகள் ஏற்படுவதுண்டு. எனவே உறவுநிலைகளை பலப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு முதலில் குடும்ப மட்டத்தில் தாய், தந்தை, சகோதரன், சகோதரி உறவுநிலைகள் ஒரு சமூகத்தில் எவ்வாறு எடுத்துக்காட்டாய் திகழ வேண்டும் என்பதைக்கருத்திற் கொண்டு வறுமையிலும் செம்மையாக வாழப் பழகிக் கொண்டால் வாழ்வில் நாம் உயர்ந்த நிலைக்கே செல்ல முடியும் என்பதை மையமாகக்கொண்டு "மூன்றாம் முத்தம்" என்னும் தலைப்பினில் அமைந்த எனது குறு நாவலை பிரசவிக்கின்றேன்.

எமது குடாநாட்டினில் கடந்தகாலங்களாக ஏற்பட்ட இயற்கை அழிவுகள் போர்க்கால சூழல்கள் மக்களின் வாழ்வியற் கோலங்களை மாற்றி யமைத்தமையை நாம் கண்டுணர்ந்தும்

அனுபவித்தும் கொண்டோம். இத்தகைய சூழ்நிலைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களை மனதிற்கொண்டு பாதிப்புக்களில் இருந்து மீண்டெழுந்து சுமுகமான வாழ்வினை வாழ்வதற்கான நம்பிக்கை நிலையை ஏற்படுத்துதற்காகவும், இந்நாவலில் நிறைவில் வரும் நிறைவான மனமகிழ்ச்சி நிஜமாகவே பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்புடன் இந்நாவலை பிரசவிக் கின்றேன்.

**நூலின் ஆசிரியர்.**
**செல்வி மிஷாந்தி செல்வராஜா**

# மூன்றாம் முத்தம்

## 01

"வெய்யில் மண்டையைப்பிளக்குது மோன, என்ன பிழைப்பு இது?

இந்த வயித்துப்பசிகாக எங்களைப்போல மனிசர் படுற பாடு கூப்பன் கடையில காத்து கிடக்கிற அளவுக்கு கொண்டு போய் விட்டிச்சே.

ச்சே,

உந்த மனேச்சர் எண்டவர் உந்தக்கடை ரேபிள் ஃபானுக்க (Table fan) இருந்து கொண்டு எங்களைக்காக்க வைத்திருக்கிற திலை அவருக்கு ஒரு தனி சுகமாக இருக்குது போல.

ச்சே இவரும் எங்கட நிலைமையில இருந்து கால்கடுக்க காத்திருக்கிற எங்கட வேதனை புரியுமெண்டு தெரியுமோ தெரியாது"

யாழ்ப்பாண நகர்ப்புற சங்கக்கடையின் வாசல் வரிசையில் நின்ற வள்ளியம்மை வறுமையின் கொடுமையாலும் வெய்யிலின் கொடூரத்தாலும் பொறுக்க முடியாமல் தன்பாட்டுக் குப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

“என்ன வள்ளியக்கா நீங்கள் மட்டும் இப்படி புலம்புகின் றீர்கள்? நாங்களும் தானே வரிசையிலும் நிக்கிறோமே, கொஞ்ச நேரமாவது வாயை மூடிக்கொண்டிரு,

“உன்ர புலம்பலால எங்களுக்கும் கிடுப்ப ஏத்தாதே” என கமலவள்ளி கத்தினாள்.

ஏய் என்ர வீட்டு நிலைமையா? உனக்கு.

வயசுபோன நேரத்தில நான் கத்துறன் எண்டா குமரி நீயும் பதிலுக்கு வாயை காட்டுறீயோ?

இவ்வளவு சனமும் பேசாமத்தானே இருக்கு.

நீயும் மற்ற மனுசரப்போல இரனடி.

ம்..சரி இந்த கிழவியளோட கதைச்சா எங்கட மானம் தான் போகும் பேசாம இருப்பம்” என மனசுக்க பேசியபடி வாங்க வந்த சாமானை வாங்கிப்போவம் என பேசாமா இருந்தாள் கமலவள்ளி.

அப்பாடி சனம் குறைஞ்சு போச்சு.

இனி எங்கட கட்டம் வந்திட்டு என முன்னோக்கிப் போனவர்களுக்குப்பேரிடியாய் பலத்த ஒலி கேட்டது.

“சாமானெல்லாம் முடிஞ்சு போச்சு மிஞ்சி நிற்கிற ஆக்கள் எல்லாரும் நாளைக்கு வாங்கோ” என்ற மனேஜரது குரல் ஆத்திரமடையச் செய்தது.

ஆத்திரமடைந்த வள்ளியம்மை “எட பாவி மனுசா, பாழாய் போவானே,

இவ்வளவு நேரமும் காத்திருந்தது உன்ர பதிலுக்கோ?

ச்சே என்ன மனுசரப்பா?

இனி என்ன செய்வேன்?

கையில காசும் இல்லையே! “அ” காட் என்ற பெயரில அனாதையாகி விட்டதோ எங்கட கூப்பன் காட்டும்.

வாசலில நிண்ட சனமெல்லாம் வாய் முணுமுணுத்து பேசியபடியே கடை வாசலைவிட்டு கலைஞ்சு போனார்கள்.

## 02

பாவம் இந்த வள்ளியம்மை யாழ் நகர்ப்பகுதியின் சாதாரண நடுத்தர வசதி வாய்ப்புக்களுடனே தனது வாழ்க்கையை நாற்பத்தாறு வருடமாக ஓட்டிக்கொண்டிருக்கின்றாள்.

தனது ஒரேயோரு மகளான வித்யாவுடன் வாழ்ந்த வளுக்கு புருஷன் ஞாபகம் வந்தது.

தகப்பன் இருந்தாலாவது கூலி வேலை செய்து என்ர பிள்ளையை கரையேத்தி இருந்திருப்பாரே.

யார் போட்ட சாபமோ இது.

நாங்கள் நல்லாய் இருக்கிறது கடவுளுக்கும் பொறுக்க வில்லை போலும். யாரிட்ட போய் சொல்லியழ.

நான் செத்தா என்ர பிள்ளையிட நிலை என்னாகிறது.

கடவுளே காப்பாத்து! என அல்லும் பகலும் புலம்பி புலம்பி அழுதாள்.

“அம்மா! ஏன் நீ எப்பவுமே என் கண் முன்னால அழுத படியே இருக்காய்?

அழாதே.

நீதானே என்னைப் படிக்க வைக்கிறாயே.

நான் நல்லாப்படிச்சு உன்னைப் பார்ப்பேனம்மா.

எனக்கும் ஒரு நல்ல வாழ்க்கையை கடவுள் தருவார் அம்மா என அன்புடன் தாயை தேற்றினாள் வித்தியா”.

இல்லம்மா நீ எப்படி படிச்சாலும் சமூகத்தில ஒரு பெண்ணால தனியே வாழ முடியாது.

நீ நல்லவளாக இருந்தாலும் எங்கட சனம் பார்வை யாலயே தப்புத்தப்பாய் பார்த்து கூடாத பேரையும் கட்டி விட்டு விடுவாங்க அதை நினைச்சுத்தானடா கவலைப்படுகிறன்.

உன்னைப்படிக்க வைக்கவே வீடு வீடாய் சென்று எல்லா வீடுகளையும் சுத்தம் செய்யிறன்,

ஆக்களையும் பராமரிக்கவும் போறன் அந்தக்காசு உனக்கு காணுமா?

என்று கண்ணீருடன் மகளை அரவணைத்து புலம்பினாள் வள்ளியம்மை.

அம்மா ஏன் இப்படியெல்லாம் கவலைப்படுறீங்க அழாதேயுங்கோ.

எங்கட வகுப்பு ரீச்சர் பின்னேர வகுப்பும் எடுக்கிறவ.

எல்லாப்பாடமும் வடிவா சொல்லித்தருவா. அதோடு பள்ளிப்படிப்பு மட்டும் போதுமம்மா.

கட்டாயம் ரியூசன் போக வேணும் எண்டு எனக்கு அவசிய மில்லை.

நான் எதிர்காலத்தில் சமூகம், நாடு நேசிக்கும் நல்லதொரு பிரஜையாக வந்து காட்டுவேன்.

தைரியசாலிப்பெண்ணாக வளர்த்து விடுங்கள் அம்மா.

வீட்டில தானம்மா நீ அழுகிறாய், ஆனால் றோட்டில போனா ஆட்கள் எல்லாரும் சொல்லினம் உங்கட அம்மாவ பாத்தா பயம் வருகுதாம் எண்டு.

ஏன்எண்டு கேட்டா நீங்கள் நல்லா ஆட்கள பேசுவீங்களாமே.

வள்ளியம்மை உதட்டில் இலேசாக புன்னகை அரும்பியது.

ம்.. ! வீட்டுக்கு வெளியே நான் இப்படி நடக்கிறதே என் பொண்ணுக்குட்டிய பாதுகாக்கத்தான்.

சரியம்மா, சாயங்காலம் ஆகுது போய் கை கால கழுவிட்டு வாரன். நீயும் கை கால கழுவி விட்டு சாமிக்கு விளக்கை ஏத்திட்டு வந்து படியடா.

காலையில வாங்கின கோயில் சாப்பாட்டை சூடாக்கி தாரேண்டா.

## 03

காலைப்பொழுதுதனை வரவேற்க வந்த கதிரவனின் ஒளி வான் வெளியை மட்டுமல்ல பூமிக்கும் அள்ளிக்கொடுத்து வித்தியாவின் வீட்டுக் கூரைக்குள்ளும் ஊடுருவி நுழைந்து ஒளி கொடுத்தான்.

கண்களைக் கசக்கி எழுந்தவள் அருகே படுத்திருந்த தாயின் கன்னங்களில் முத்தமிட்டு எழுந்தாள்.

வள்ளியம்மை மகளின் முத்தத்துடனே கண்விழித் தெழிந்து தனது கடமைகளை செய்வதுண்டு.

அன்றும் மகளுக்கு வழமைபோல பாணும் வாழைப்பழமும் வாங்கிக் கொடுத்து விட்டு தனது கடமைக்குச் செல்ல ஆயத்த மானாள்.

“அம்மா நான் போயிற்று வாரேன்.

இண்டைக்கும் பின்னேரம் வகுப்பு இருக்கு, வர லேற்றாகும்.

அஞ்சரை மணிக்குத்தான் வருவேனம்மா ஃபாய்!

## 04

தனது நண்பிகளுடன் சேர்ந்து கால்நடையாக பாடசாலை செல்வது வித்தியாவின் பழக்கமாய் விட்டது.

வித்தியாவின் நண்பி சாரதா "ஏய் வித்தியா?

என்ன நீ எப்ப பாத்தாலும் புத்தகமும் கொப்பியுமாக இருக்கிறாயே?

உனக்கு எங்கள போல கையில கான்ட் ஃபோன் வச்சு பாவிக்க விருப்பம் இல்லையா?

உனக்கு மதிப்பே இல்லாம போகப்போகுது.

ஒரு ஃபோன் வாங்கடி

வித்தியாவுக்கு கோபம் வந்தது.

இருந்தும் அவள் பாடசாலை சீருடையில் வந்ததால் மிகவும் தெளிவாகவே "விரலுக் கேற்ற வீக்கம்" என்றால் என்ன சாரதா?

அதுக்கு அர்த்தம் கூறேன் பார்க்கலாம்.

சாரதாவுக்கு புரிந்தது.

Sorry வித்தியா என்னை மன்னித்துவிடு என்றாள்.

"சரி சரி" வா பள்ளிக்கூடம் வந்திட்டு.

பாடசாலை மணி அடித்தது.

வகுப்பில் முதலாம் பாடமாக தமிழ்ப்பாடம்.

தமிழ்ப்பாட ஆசிரியர் வகுப்புக்குள் வந்தார்.

குட்மோனிங் ரீச்சர். குட்மோனிங் ஸ்ருடண்ற்ஸ் சரி.

இன்று உங்கள் எல்லோருக்கும் புதுதலைப்பு ஒன்று தருகின்றேன் நூறு வரிக்கு குறையாமல் குறுங்கட்டுரை எழுதுங்கள் பார்க்கலாம்.

யார் நல்லா எழுதுறாங்களோ அவர்களுக்கு இன்று நல்ல பரிசு தருவேன் என்றார் தமிழ்ப்பாட ஆசிரியை வதனா.

தலைப்பின் பெயர் "அப்பாவின் அரவணைப்பில்".

நெஞ்சில் திக் என்றாற் போல் இருந்தது வித்தியாவுக்கு.

கையில் பேனாவோடு எழுத ஆயத்தமாய் இருந்தவளின் கண்களில் ஆறென கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது.

“அப்பா!,

அப்பா எப்படி இருப்பார்,

எங்கட அப்பா எங்கே?

அப்பாட முகம் ஞாபகம் வரவில்லையே என விம்மி விம்மி அழுதாள்.

வகுப்பில் முதல் மாணவி.

அடுத்த 2014ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவில் முதலாம் இடத்தை பெறப்போகும் மாணவி என புகழ் வட்டத்தில் இருப் பவள் கண்களில் கண்ணீரைக் கண்ட ஆசிரியர் “வித்தியா அழாதேயம்மா” உங்கட அப்பா உயிரோடு... ஆசிரியர் கேட்டு முடிப்பதற்குள் வேண்டாம் ரீச்சர் கேட்க வேண்டாம்.

இலேசாக இருந்த மனதினை கனதியாக்கிவிட்டது ஆசிரியர் கேட்ட கேள்வியா?

அல்லது

மனதில் இருந்த அப்பா பற்றிய ஏக்கமா?

அல்லது இதுவரைக்கும் என் அப்பா பற்றி அறியாமல் இருப்பது தானா?

எதுவுமே புரியாது இருப்பதால் தானா நான் இப்படி அழுகின்றேன் என தன்னைத்தானே பல கேள்விகள் கேட்டு மனம் நொந்து அழுத படியே அன்றைய கல்வியை கண்ணீரிலே கழித்தாள் வித்தியா.

## 05

அஞ்சரை மணிக்குத்தான் வருவேனம்மா என்று சொல்லிச்சென்ற மகள் இரண்டரைக்கே வந்திட்டாளே என நினைத்த வள்ளியம்மை  மகளின் முகத்தின் தோற்றம் கண்டு என்னம்மா முகமெல்லாம் வெளுத்துப்போய் இருக்கே.

யாராச்சும் ஏதும் சொன்னாங்களா?

“இல்லை என்பிள்ளைய வகுப்பில யாரும்பேசிட்டாங்களோ?”

“சொல்லடா என் பொண்ணுக்குட்டி” என மகளை அரவணைத்துக் கேட்டாள் தாய் வள்ளியம்மை.

இல்லையம்மா நான் முகம் கழுவிவிட்டு வாரனம்மா.

சாப்பாடு தாங்கோ.

சரியா பசிக்குது.

மதிய உணவை பரிமாறுவதற்காக சமையலறை நோக்கி நகர்ந்தாள்  வள்ளியம்மை.

## 06

இன்றைய மாலைப்பொழுது கூட என் வேதனை பார்த்துத் தானா? இவ்வளவு சிவப்பாக மாறியது.

ஏன் இன்று மட்டும் இவ்வளவு சிவப்பு?

ஓ.! வானம் இன்று அழவில்லையே!

இடி முழங்கியதாலா இப்படி வேதனை தாங்க முடியாமல் சிவந் திருக்கிறது.

என் மனசு காயப்பட்டதைப்போலவா வானுக்கும் காயம் ஏற்பட்டி ருக்கு?

தன்னையும் வானையும் ஒப்பிட்டு நோக்கியபடி வாசல் முற்றத்தில் தனிமையில் உட்கார்ந்திருந்தாள் வித்தியா.

கடவுளே நான் என்ன செய்வேன்?

அம்மாவிட்ட எப்படி அப்பாவை பற்றிக்கேட்பது?

அப்பாவை பற்றிக் கதைத்தாலே அம்மா கண்களில் கண்ணீர்தான் வருகிறது.

வாயை திறந்து பேசாமல் ஊமையாகிவிடுகிறதே என் அம்மாவுக்கு.

ஊரிலயும் யாரும் எங்கட அம்மாவ ஒரு சபையில வந்தாவது முன்னுக்கு நின்று வேலை செய்ய கூப்பிடுறதே இல்லையே.

நான் அறிஞ்ச விதத்தில என்னோட அம்மா ரொம்ப நல்லவ.

என் அம்மாவ நான் யாரிட்டேயும் விட்டுக்கொடுத்து பேச மாட்டேன்.

அம்மா தான் எல்லாம்.

அம்மா மனசு நோகமா எப்படி அப்பா விசயத்தை கேட்டறிவது?

பலத்த யோசனைகளுடன் வானத்தையே வெறிச்சபடி பார்த்திருந்தாள் வித்தியா.

அம்மாடி வித்தியா என்னம்மா இப்படி தனிமையில இருந்து யோசிக்கிறாய்?

நான் உன் அம்மா கண்ணு.

எதையும் மனசில வைச்சு இருக்கக்கூடாது.

பிறகு மனசு கனத்தா எதையும் சரியா செய்ய முடியாது.

உன் அம்மா நான் இருக்கும் வரைக்கும் நீ ஒண்டுக்கும் கவலைப் படக்கூடாதடா.

அம்மாவின் அன்பான அந்த ஆறுதல் வார்த்தைகள் வித்தியா மனதை இளக வைத்தது.

அம்மா மடியில் இருந்தால் எந்தக்கவலையும் வராது என்று சொல்வார்கள் அந்த சுகம் இதுதானா?

ஆ!. இந்த சுகமே போதும்.

தேவையில்லாமல் அம்மாகிட்ட அப்பா பற்றி கேட்டு அம்மா மனசை காயப்படுத்த வேண்டாம் என முடிவெடுத்துக் கொண்டு சந்தோசமாக கிணற்றடி நோக்கி நகர்ந்தாள் வித்தியா.

சாமிக்கு விளக்கேத்துவது அவளது தினசரி கடமை.

இன்றும் அவள் தனக்குப்பிடித்த முருகன் சாமியிடம் "கடவுளே என் அம்மா மனசு எப்பவும் கவலைப்படக்கூடாது",

அதன்படி நானும் நடக்கக் கூடாது,

எப்பவும் எல்லாரும் நல்லாய் இருக்க வேணும் என்று சாமியிடம் பிரார்த்தனை செய்துவிட்டு ஏட்டுக் கல்வியை கற்க ஆயத்தமானாள்.

## 07

மாதங்கள் நகர்ந்து உயர்தரப்பரீட்சை வாசலுக்கு அழைத்துச் சென்றது வித்தியாவுக்கு.

பரீட்சை மண்டபத்தினில் மிகவும் தெளிவாகவே இருந்து தனது பரீட்சைக்கான உரிய பதில்களை எழுதினாள்.

கலைப்பிரிவைச்சேர்ந்த வித்தியா தமிழின் இனிமையை நன்கு உணர்ந்து தமிழ்ப்பெண்ணாக வாழ்வதுடன் தமிழ்த்தின விழாக்களிலும் தலைமை தாங்கி அதிபர், ஆசிரியர் மனங்களை கவர்ந்துகொண்ட சிறந்த மாணவியுமாவாள்.

இறுதிநாள் பரீட்சையை எழுதி விட்டு தனது பாடசாலை வாழ்வு இனி முடியப்போகுதே என எண்ணியபடி இனி செய்ய லாம்?

என எண்ணி தனது பாடசாலைச் சுற்றுப்புறச்சூழலை ஒரு முறை சுற்றிப்பாப்பம் என நினைத்து தனியாகவே பாட சாலையை சுற்றிப்பார்த்தாள்.

சுற்றிப்பார்க்கச்சென்றவளுக்கு வளவில் நின்ற அரச மரத்தின் கீழ் உள்ள எறும்புப்புதர் புதினமாக தென்பட்டது.

இந்த எறும்புகள் என்ன செய்கின்றது என எண்ணியவாறு அருகே உள்ள சீமேந்திலான ஆசனத்தில் அமர்ந்து உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

அட இந்த எறும்புகள் கூட்டம் ஒழுங்காகப் போகின்றது. ஆனால் இந்த வரிசை எறும்புகள் மிக வேகமாக ஒழுங்கில்லாமல் மாறி மாறி போகின்றதே ?

ஏன்?

ஐயோ பாவம் ஒரு எறும்பு செத்துப்போய் இருக்கிறதே.

இதை கவனிக்க யாருமில்லை என்றா மிச்ச எல்லா எறும்புகளும் பரபரத்துக்கொண்டு திரிகின்றன.

ம்.. என்ன அற்புதம்!

ஒழுங்காகச் சென்ற எறும்புகளும் மீண்டும் திரும்ப வந்து இறந்து போன எறும்பை சுமந்து கொண்டு செல்கின்றதே.

எங்க போகினம்?

சரி நானும் பின்னால் போய் பார்ப்பம்

என்று அவளும் எறும்புகளின் பின்னால் சேர்ந்து போய் பார்த்தாள்.

என்ன ஆச்சரியரம்?

இறந்து போன இந்த எறும்பை இத்தனை எறும்புகளும் சுமந்து சென்று மண்குழி தோண்டி புதைத்துவிட்டனவே.

சில மனிதர்களிடம் இல்லாத இந்த மனிதப்பண்பு இந்த எறும்புகளுக்கு எப்படி ஏற்பட்டது?.

ஓ..! உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் இந்த உணர்வு இருக்கிறது.

ஆனால் நாம் தான் அதனை பின்பற்றுவதில்லையே.

இந்த எண்ணங்களில் மூழ்கி இருந்தவளுக்கு கண்களில் கண்ணீர் அரும்பியது.

கடவுளே “ஒரு எறும்பு செத்துப்போனதுக்கே இத்தனை எறும்புகளும் ஓடி வந்து அதை சுமந்து சென்று அதன் உடலை உரிய முறையில் புதைத்தும் விட்டதே,

ஆனால் எங்களுக்கென்றும் யாருமில்லையே”

ஒரு வேளை நான் இறந்து போனால் அம்மா தனித்துப் போய் விடுவாரே,

இல்லாட்டி அம்மா இறந்து...........

ச்சே......!

வேண்டாம் இந்த சிந்தனை.

இப்படியெல்லாம் சிந்திக்கின்றேனே.

ஏன்?

எல்லோருடைய வாழ்விலும் மரணம் நிச்சயம் உண்டு தான்.

ஆனால் செத்துப்போனால் எம்மைச் சுமந்து சென்றால் நாலுபேர் வேண்டு மல்லாவா?.

இதை ஏன் மனித சமுதாயம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

எங்கள் பாடசாலை வளவிலுள்ள எறும்புகளுக்கே இவ்வளவு ஒற்றுமை என்றால் எங்கள் பாடசாலைச்சமூகமும் இதைவிட நல்லதாகவே இருக்கும்.

இத்தகைய பழக்கங்களை எம் பாடசாலைச்சமூகத்தில் இருந்துதான் கற்றுக்கொண்டது போலும்

என நினைத்த வண்ணம் பாடசாலை வளவினை விட்டு வெளி யேறினாள் வித்தியா.

# 08

நீலவானமும் நிறம் மாறும் மழையின் வருகை கண்டு.

நீலம் போய் வானம் வெளுத்து ஆகாயம் எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது.

துளிதுளித்தாய் சிந்திய மழைநீர் திடீரென சோவெனக் கொட்டியது.

புத்தகப்பையை தலையிலே தூக்கியபடி நனையாமல் போக நினைத்த வித்தியா புத்தகப்பையுடன் சேர்ந்து சீருடையை யும் நனைத்த படியே வீட்டுக்குச் சென்றாள்.

வீதியால் சென்றவள் தனது சிநேகிதிகள் மழையில் நனை யாதவாறு தங்கள் அப்பாவுடன் சென்றதையும், அண்ணன் மாருடன் சென்றதையும், கண்டு அவளின் கண்களில் நீர் கொட்டியது.

இருந்தாலும் மனதைத்தேற்றிக்கொண்டபடி...

அம்மா என்ன செய்வார்.

ஐயோ கடவுளே எங்கள் வீடு மட்டுமா நனையும்?

வீட்டிலுள்ள எல்லாமே நனையப்போகுதே என பல சிந்தனைகளை சிறகடிக்க உடல் முழுவதுமாய் நனைந்தபடி வீட்டுக்குள் போனாள்.

அம்மா எங்கே?

அம்மா... அம்மா...ஆஆ...!

அழைத்தபடி தலையை திருப்பிப்பார்த்தவள் ஏங்கிப்போய் நின்றாள்.

அம்மாடி வித்தியா வந்திட்டியாடா? செல்லம்.

இஞ்ச பாரம்மா காத்தால வாங்கி வச்ச "மா"வை பாழ் பட்ட மழை வந்து கரைச்சு கொட்டிப்போச்சு.

இனி இராச்சாப்பாட்டுக்கு என்ன பண்ணப்போறேனோ?

தெரியலையே.

அம்மா நீ யோசிக்காதே இன்றைக்கு வெள்ளிக்கிழமை தானே பக்கத்துக்கோயிலில் பொங்கல் படையல் எல்லாம் செய்யிறாங்க.

நாங்க போய் அந்த சாமியையும் கும்பிட்டு பிரசாதத்தை யும் வாங்கிட்டு வருவம் என தாயை தேற்றியவளுக்கு மனதில் கவலையாக இருந்தது.

"பாவம் அம்மா...! சரியா கஷ்ரப்பட்டு உழைச்சு வயித்துப் பசிக்காக வாங்கி வைச்ச மாவை இந்த மழை ஏழை என்றும் பாராமல் எங்கட வீட்டுக்குள் வந்து இப்படி துன்பத்தை உண்டு பண்ணி போய்விட்டதே". என வருத்தமுற்றாள்.

## 09

அன்றைய இரவு வித்தியாவின் வாழ்வின் விடுகதையை விடு வித்தது.

ஆம்.

அன்றைய இரவில் வித்தியாவின் தாய் தன் மகளின் எதிர்காலத்தை எண்ணி ஒரு தாயாக பல அறிவுரைகள் கூற வேண்டிய கடப்பாடுகளை கூறினாள்.

அம்மாடி வித்தியா “எனக்கும் வயசாச்சு இனி மேல் நீ சின்னப்புள்ள இல்லை.

திடீரென்று நான் செத்துப்போனால் நீ வாழ்வில் தளராமல் தைரியசாலிப்பெண்ணாக வாழ வேண்டும்.

அம்மா என்ன சொல்லுறீங்கள்?,

இப்படி கதைக்காதேயுங்கோ.

இல்ல அம்மா சொல்றத கேளடா.

சரி அம்மா சொல்லுங்க உனக்கென்று அம்மா எதுவுமே சம்பாதிக் கல என்று நினைக்காதே அம்மாடி.

அம்மா தப்பு பண்ணிட்டேனடா.

என்னம்மா சொல்றீங்கள்?

நான் பிறந்து வளர்ந்தது வன்னியில.

அங்க ஒரு கிராமப்புறத்திலுள்ள நல்ல பாடசாலையில தான் நான் ஓ.எல் வரை படிச்சனான்.

எங்கட அப்பா கனக சுந்தரம் கடை வியாபாரம் செய்து தான் பிழைப்பை நடத்தினார்.

அம்மா வீட்டில இருந்து என்னைக்கவனிச்சு வளர்த்தா.

வகுப்பில் சுமாராகத்தான் படிப்பேன்.

அவ்வளவுக்கு உங்க அம்மா கெட்டிக்காரி இல்ல.

ஓ.எல் இல கணிதம் ஃபெயில் பண்ணினவுடன் திரும்ப எடுக்காமல் விட்டுட்டேன்.

பிறகு தையல் படிக்க போனபோது பதினெட்டு வயசில எனக்கு மேசன் வேலை செய்யப்போன சிவா என்ற ஒருத்தனை காதலிச்சேன்.

அவனும் காதலிச்சான்.

பத்தொன்பது வயதில என்னோட அப்பாவுக்கு தெரிய வந்தது.

அவரும் முதல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டு பிறகு வயல் வேலை செய்ய போன இடத்தில வயற் பாம்புதீண்டி அப்பா இறந்து போய்விட்டார்.

என்னோட அம்மா பாக்கியவல்லி அப்பா செத்த சோகம் தாங்காது எங்கட வீட்டுக்கு ஆண்துணை இல்லையென்று நான் காதலிச்ச சிவாவையே 1986ஆம் ஆண்டு கல்யாணம் பண்ணி வைச்சா இருபத்தொரு வயசில. சந்தோசமாகத்தான் இருந்தோம்.

உடுப்பெல்லாம் நல்ல தைச்சு கொடுத்து நல்ல வருமான மும் வந்தது.

என்னை கல்யாணம் பண்ணின சிவாவுக்கு என்னை விட அஞ்சு வயசு தான் கூட.

அவருக்கு இருபத்தாறு வயசு.

என்னை ரொம்ப அன்பாய் பார்த்தார்.

வாழ ஒரு நிரந்தர வீடும் கிடைத்தது.

எங்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

பிள்ளை பிறந்ததும் சந்தோசமாய் இருந்தேன்.

என் மகனுக்கு சேது என பெயரும் சூட்டி சந்தோசமாக வாழ்ந்திருந்த வேளையில் சிவா வேலை விசயமாக வன்னிக் குப்போன வழியில் வாகன விபத்தில் சிக்குண்டு பலியாகிவிட்டார்.

என்னோட வாழ்க்கை இருபத்தொரு வயதில் முடிந்து போய் விட்டது என்று நினைத்தேன்.

ஆனால் பிள்ளை இருக்கிற சந்தோசத்தில சந்தோசமாக வாழலாம் என முடிவு செய்து சந்தோசமாக வாழ வழியை விடாது சிவாவின் அம்மா தன் பிள்ளைக்குப் பிறந்த பிள்ளையை தன்னிடம் தரும்படி கேட்டார்.

நான் கொடுக்கவில்லை.

பிறகு யாழ்ப்பாணத்தில் வந்த இந்தியானாமி பிரச்சினை யான காலகட்டமான 1987ஆம் ஆண்டு வீட்டுக்குள் இராணுவம் புகுந்த காலகட்டத்தில மூன்று வயதான மகனை தவற விட்டு விட்டேன்.

என் தாயையும் உயிரோடு இழந்துவிட்டேன்.

என்ர புள்ளைக்கு என்ன நடந்தது என்று இன்று வரையும் தெரியாது.

"அம்மா... நான் எப்படி பிறந்தேன்?

எனக்கு அண்ணாவும் இருக்கிறானா?

என வித்தியா குறுக்கே கேட்டாள்.

என்னோட அப்பா பெயர் அதுவில்லை வாசுதேவன் அல்லவா?.

ஆம் சொல்லேறண்டா.

உன் அம்மாட விதியைப்பாரடா.

தயவு செய்து உன் அம்மாவான என்னை பெத்த பிள்ளை நீ கேவலமாக கதைக்கக் கூடாது என்று தான் இந்த கதையை இவ்வளவு நாளும் நான் சொல்ல வில்லையடா.

அம்மா... என்ன நீங்கள் உங்களைப் போய் நான் தப்பா நினைப் பேனா?

ஐயோ அழாதேயுங்கோ.

எனக்கு ஒரு கதையும் சொல்ல வேண்டாம். நீங்க எப்பிடி இருந்தாலும் என்ர அம்மா நல்லதொரு அம்மாதான்.

என்ர அம்மாவை நான் எந்தக்காலமும் கடைசிவரை தப்பாகவே நினைக்க மாட்டேன்.

## 10

இன்றைய காலைப்பொழுதினை சந்தோசமாக வரவேற் றாள் வித்தியா.

தாய் வள்ளியம்மை சாம்பிராணி வாசனையின் நறுமணத் துடன் கண்விழித்தெழுந்தாள்.

அம்மாடி வித்தியா, நீயா இவ்வளவு வேலையும் செய்து வைத்திருக்கிறாய்?

ம்...

இனிமேல் உங்கள நான் ஒரு வீட்டுக்கும் விடமாட்டேன்.

நீங்கள் இனி யாருடைய வீட்டுக்கும் போய் நீங்கள் உழைக்க வேண்டாமம்மா.

நான் வளந்திட்டேன் சரியா.

மகளின் வார்த்தைகளைக் கேட்டு பூரித்துப் போன வள்ளியம்மை அன்புடன் அரவணைத்து மகளின் நெற்றியில் முத்தமிட்டாள்.

தாயின் அன்பு முத்தத்தை பெற்றுக்கொண்டவள் தாயுட னேயே இருந்து கொண்டு அம்மா நீ அழாமல் என்கிட்ட ஒண்ணு சொல்லுவியா?

ம்.. கேளேண்டா.

எப்பவுமே நீங்க என்னை அன்பாய் ஆயிரம் தடவைகள் முத்தமிடுகிறீர்களே என் அப்பா என்னை எப்போதாவது முத்த மிட்டு இருக்கிறாரா?.

ம். ஒரே ஒரு தடவை மட்டும் தான் 1996ஆம் ஆண்டு நீ பிறந்த போது.

இருபத்தொன்பது வயதில் நான் யாருமே இல்லாத விதவையாக வாழ்ந்த எனக்கு 1995ஆம் ஆண்டு வன்னி நகரினில் தனியாக வாழ்ந்த போது என் மீது இரக்கப்பட்டு எனக்கு வாழ் வளித்த வாசுதேவன்தான் உன் அப்பா.

நான் இரண்டாவது திருமணம் செய்தேன். அதனால் தான் சமூகம் என்னை தனியாக ஒதுக்கிவிட்டது. வாசுதேவன் ஒரு தனியார் கம்பனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது எனது நிலைமை அறிந்து என்னை விரும்பி கேட்டுத்தான் நான் அவரை திருமணம் செய்தேன்.

திரும்பவும் வாழ்வில் ஏற்பட்ட துன்பம் உன் அப்பாவை யாரோ காட்டிக் கொடுத்து காணாமற்போனோர் பட்டியலில் அவரையும் இழந்து விட்டேன்.

உன்னை மகளாக கைகளில் ஏந்திய போதே உன்னை முத்தமிட்டவர் உன் தந்தை.

மருத்துவமனை வாசலை விட்டு வெளியேறிய வாசுவை என் வாழ்க்கையில் இருந்து பறித்துவிட்டார்கள்.

உனக்கு நினைவிருக்காதம்மா.

நான் ஒருபக்கம் விதவை யாகவும் இன்னொரு பக்கம் கணவன் இருந்தும் இல்லாமல் வாழும் துர்ப்பாக்கியசாலியாக வாழ்கின்றேன்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்லி சொல்லி வளர்ப் பவரம்மா நீங்கள்.

அப்பாவின் முதல் முத்தம் எனக்கு என் நெற்றியில் முத்திரையிடப் பட்டிருக்கே.

நான் பெற்ற இனிய செல்வம் அம்மா

மிகவும் மகிழ்ச்சிதான் எனக்கு.

அம்மா உங்கள் துன்பம் நீங்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இறைவனை பிரார்த்தியுங்கள் நல்லதே நடக்கும்.

## 11

"வித்தியா... நீ பாஸடி" என கத்திக்கொண்டு வித்தியாவை நோக்கி வந்தாள் சாரதா.

என்ன! என்ன சாரதா?

ஆமா நீ இன்டைக்கு பேப்பர் ஒண்டும் பார்க்கவில்லையா?

எங்கட பரீட்சைப்பெறுபேறுகள் வந்திட்டு.

அதில நீதான் பாடசாலை மட்டத்திலயும் சரி, யாழ் வலய மட்டத்திலயும் கலைப்பிரிவில முதல் மாணவி என்று பேப்பரில யும் வந்திருக்கு,

பள்ளிக்கூட பலகையிலயும் எழுதிப்போட்டிருக்கு.

நானா...! அம்மா, நானாடி,

வள்ளியம்மை சந்தோசம் தாங்க முடியாம் மகளை வாரி அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

அம்மாடி வித்தியா நானும் வாரேனம்மா என் பிள்ளையிட பேரை பள்ளிக்கூட ஃபோட்டில பாக்க ஆசையாயிருக்கு.

என்னையும் கூட்டிட்டு போ பிள்ளை.

சரி அம்மா உங்கட சந்சோசம் தான் என்னோட சந்தோசம்.

வாங்க கெதியா உங்களையும் கூட்டிட்டுப்போறன்.

## 12

மகளின் பெயரை முதலாவதாகவும், சிறந்த பெறு பேற்றினையும் கண்ணுற்ற வள்ளியம்மையின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் ஆறென பெருக்கெடுத்து வழிந்தோடியது.

தான் கஷ்ரப்பட்டதற்கு பலன் கிடைச்சிட்டே என்று தன்னிலை தடுமாறி பெரும் உவகை கொண்டாள் வள்ளியம்மை.

பாடசாலை அதிபர், ஆசிரியர் உட்பட அனைவரும் வள்ளியம்மைக்கும் பாராட்டுக்களை கூறி வாழ்த்தினர்.

வள்ளியம்மையும் தனது நன்றிகளை அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தெரிவித்தாள்.

பாதங்களில் வீழ்ந்த வள்ளியம்மையை அந்த அதிபர், ஆசிரியர்கள் அம்மா எழுந்திருங்கள்.

பாடசாலைக்கு பெருமை சேர்த்துக்கொர்டுத்தது தங்கள் பிள்ளை யல்லவா?

எங்களுக்கும் மகிழ்ச்சிதான்.

எல்லாப்பிள்ளைகளையும் அதிபர், ஆசிரியர்கள் ஒரே விதமாகத் தான் பாடங்களைக் கற்பிக்கின்றார்கள்.

ஆனால் ஒரு சில பிள்ளைகள் தான் பாடசாலைக்குப் பெருமை யைத் தேடிக்கொடுக்கின்றார்கள்.

இப்படியான பிள்ளைகளை ஈன்றெடுத்த பெருமை உங் களையே சாரும் என பணிவாக பேசி ஆறுதல் அளித்தார் பாடசாலை அதிபர் அவர்கள்.

மனதில் பூரிப்புடன் மகளையும் அழைத்துக்கொண்டு வீடு நோக்கி சென்றாள் வள்ளியம்மை.

# 13

வள்ளியம்மையைக் கண்டு தெரியாமல் அலட்சியப்படுத்தி போனவர்கள் எல்லாம் அன்றைய நாள் தொட்டு வள்ளியம்மை யிடம் மிகவும் மரியாதையாக நடந்தனர்.

வள்ளியம்மை உன் மகளின் பெயர் தான் பத்திரிகை எல்லாம் வருகுதே.

கெட்டிக்காரப்பிள்ளையைத்தான் பெத்து இருக்காய்.

என ஊரில உள்ள சனமெல்லாம் வள்ளியம்மைக்கு புகழாரம் செய்தார்கள்.

வீட்டு வேலைக்கு போன இடமெல்லாம் இப்ப வள்ளியம் மையைக் கண்டு மரியாதை செய்யும் அளவுக்கு அவளும் ஆளாகி விட்டாள்.

இத்தனை மாற்றங்களையும் கண்ட வள்ளியம்மை எல் லாப் பெருமைக்கும் காரணம் தான் பெற்றெடுத்த பிள்ளைதான் காரணம் எனப் புரிந்து கொண்டாள்.

## 14

பல்கலைக்கழகம் தெரிவானோருக்கான விழா ஏற்பாடு பாடசாலையில் நடைபெற்றது.

அனைத்து மாணவ மாணவிகளும் விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும், ஆயத்தங்களையும் செய்தார்கள்.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், விருந்தினர்கள் அனைவரும் விரைவாகவே வந்திருந்தார்கள்.

பாராட்டுக்குரிய மாணவ மாணவிகளை வாழ்த்தும்படி கொழும்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த விரிவுரையாளரான சேது M.B.B.S அவர்களை உரையாற்றுமாறு அழைத்தனர்.

உரையாற்றத் தொடங்கிய சேது அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வறுமை ஒரு தடையல்ல என்ற கருத்தை மையமாக வைத்து தனது வாழ்விலே வைத்திய துறையில் சாதித்ததன் காரணத்தை மாணவர் மத்தியில் பகிர்ந்தளித்தார்.

மூன்று வயதிலே இந்திய இராணுவம் யாழ் குடா நாட்டில் புகுந்து பிரச்சினை நேர்ந்த போது தாயிருந்தும் தாயை இழந்து அனாதையாகிப் போன வேதனையை நன்கு உணர்ந்தவன் நான்.

பயம் ஒரு காரணத்தினால் எனது தாயை விட்டு கொஞ்ச நேரம் விலகியதால் சிறுவர் இல்லத்திற்கு என்னை ஒரு வயதான பெரியவர் கொண்டு போய் சேர்த்து விட்டார்.

சிறுவர் இல்லம் என்றாலும் அவர்கள் என்னை ஒரு வைத்தியராக உருவாக்கி விட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம் மனோ தைரியமும் இலட்சிய மும் தான் என கூறிய சேதுவின் வாசகங்களைக் கேட்டு புல்லரித் துப்போன வள்ளி யம்மை என் மகன் சேதுவா?

ஆ.. என் மகன் தான்.

இது என் மகன் தான்.

ஓடிப்போய் என் மகனைக்கட்டிப் பிடித்து அரவணைக்க வேண்டுமே.

என்னமாய் வளந்திட்டான் என்ர புள்ள.

இருந்தாலும் அவள் மனம் பின்னடித்தது நான் தான் அம்மா என்று சொன்னால் என் மகன் என்னை ஏற்பானா?

ஐயோ கடவுளே!

அப்பா செத்தாப்பிறகு ஏன் அம்மா இன்னொரு கல்யாணம் கட்டினாய் என்று என் மீது கோபப்படுவானா?,

இப்ப இருக்கிற பாசம் கூட என்னைப்பாத்தா பிறகு குறைஞ்சிடுமே.

வேண்டாம் நான்தான் அம்மா என்று சொல்லாமல் இருப்பம் என மனதிலே புளுங்கி வேதனைபட்டுக் கொண்டிருந்தாள்.

“என்ன இருந்தாலும் என்னை அம்மா என்று முதல் அழைத்தவன் என் மகனல்லவோ?”

ஆசனத்தில் அமர முடியாமல் வெளியே வந்து விக்கி விக்கி அழுத வண்ணமாகவே இருந்தாள்.

அம்மா... என்னாச்சு?

ஏன் அழுகிறீங்கள்?

எல்லாம் புரிஞ்சு போச்சு அம்மா.

என்னோட அண்ணாதானே Dr.சேது.

எனக்கும் அண்ணா இருக்கிறார்.

நான் இனி தனியாள் இல்லம்மா.

வாங்கம்மா, வந்திருங்க.

எல்லாம் நல்லது தான் அம்மா நடக்கும் என தாயை தேற்றிக் கொண்டு மண்டப ஆசனத்தில் உட்காரச்செய்தாள் வித்தியா.

## 15

மனதில் கனதியுடனும் மகிழ்ச்சியுடனுமாக கல்லாய் இருந்தாள் வள்ளியம்மை.

“எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த கலைப்பிரிவில் முதன்மை இடம் வகித்து, யாழ் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துக்கொடுத்த செல்வி வாசுதேவன் வித்தியா அவர்களை மேடைக்கு அழைக்கின்றோம்.”

என அறிவித்தல் ஒலித்தது.

இவருக்கான, பதக்க மாலையை பாடசாலை அதிபர் அவர்கள் சூட்ட, சிறப்பு பரிசினை Dr. சேது அவர்கள் வழங்குவார் என தெரிவிக்கப்பட்டது.

மேடையேறிய வித்தியா அதிபரிடம் பதக்க மாலையை பெற்றதுடன், Dr. சேது அவர்களிடம் பரிசினை வாங்கும் போது “அண்ணா”, நீங்கள் என்னுடைய அண்ணா என்று அண்ணனின் பாதங்களில் வீழ்ந்து ஆசீர்வாதமும் பெற்றுச் சென்றாள்.

Dr. சேதுவுக்கு எதுவுமே புரியவில்லை.

வித்தியாவை கண்டதும் அவளையே உற்று நோக்கிய வாறு இருந்தார்.

அடுத்ததாக முதன்மை மாணவியின் சிறப்பு பேச்சுக்காக காத்திருந்தார்கள்.

முதன்மை மாணவியான வித்தியா "எனது இத்தனை பெருமையும் என்னை ஈன்றெடுத்த அன்னையையே சாரும், என் பெருமைக்குரிய என் அன்னையை மேடையில் அழைத்து அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்"

தன் தாயை மேடைக்கு அழைத்தாள்.

வள்ளியம்மை எதிர்பார்க்கவில்லை தான் மேடையேறு வதென.

இருந்தாலும் மகளின் சந்தோசத்திற்காக மேடையேறிப் போனாள்.

மண்டபத்தினில் அமர்ந்திருந்த Dr. சேதுவின் முகம் பூரித்தது.

மனதில் தன் தாயின் முகத்தை உன்னிப்பாக நோக்கினான். வருவது என் அம்மா.

அம்மாதானா?.

ம் என்னோட அம்மா தான்.

என அம்மாவின் இடது கால் பெருவிரல் தழும்பாய் ஒரு அடையாளம் இருக்குமே என நினைத்து தன் தாயின் கால்களை பார்த்தான்.

அரங்கில் பொருத்திவிருந்த மின்விசிறி இதமான காற்றை மட்டுமல்லாது வள்ளியம்மையின் சேலையை காற்றில் அசைய வைத்து அவளின் கால்களைக் காட்டிக்கொடுத்தது.

"ஆ...ஆம் என் அம்மாதான்"

தாயின் தோற்றம் வயதுக் கேற்றாற் போல் மாறி இருந் தாலும் என் அம்மாவை எனக்குத் தெரியாதா?.

வித்தியாவும் என்னை அண்ணா என்றழைத்தாளே.

ம்

நிச்சயம் அவளும் எனக்குத் தங்கை தான்.

வைத்தியன் என்றாலும் நானும் அன்புக்காக ஏங்குகின்ற ஒரு சராசரி மனிதன் தான் என நினைத்து தன் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் தன் தாயாரின் அருகே சென்று பாதங் களில் வீழ்ந்து வணங்கி தாயை கட்டி அணைத்து முத்தமிட்டான் சேது.

வித்தியாவிடம் இருந்து ஒலிவாங்கியை வாங்கிய சேது "சபையோர் மன்னிக்கவும், நான் தேடிய எனது அம்மா.

இங்கே தான் உள்ளார்.

அதிபர், ஆசிரியர்கள் அனைவருக் கும் மிகவும் நன்றி.

என் அன்னையை என்னிடம் மீட்டளிக்கத்தான் இறைவன் போல என்னை இங்கு வரவேற்றுள்ளீர்கள்.

இன்றைய நாள் என் வாழ்வில் மறக்க முடியாத நாள்.

என் அன்னையை மூன்று வயதில் இழந்த நான் இருபத் தைந்து வருடம் கழித்து இன்றே சந்தித்துள்ளேன் எனக்கூறி தன் தங்கை வித்தியாவின் நெற்றியினில் முத்தம் ஒன்று கொடுத்து வாழ்த்தியதுடன் தாயுடனே வெளியேறி சபை ஆசனத்தில் அமர்ந்தான் சேது.

நிகழ்வு முடிந்ததும் தன் தங்கையையும், தாயையும் அழைத்துச் சென்றான் சேது.

# 16

தாய் வள்ளியம்மை மகனைப் பார்த்தபடியே இருந்தாள். தன் தாயின் குறிப்பறிந்து என்னம்மா ஏதோ சொல்ல நினைக் கிறீங்கள் ஆனால் சொல்ல முடியாமல் இருக்கிறீங்கள்.

நீங்கள் உங்கட கடந்த வாழ்க்கையை எண்ணி பயப்புடு றீங்கள். எங்க உங்கள நான் வெறுத்திடுவேனோ என்று, அப்படித் தானே.

இல்லையம்மா,

வித்தியா எல்லாம் எனக்குச் சொல்லிட்டாள்.

நான் உங்கள் மகனல்லவோ...!

எப்பவும் ஒரு நல்ல மகனுக்கு தாயின் பாசத்தைவிட எந்த தாயினதும் கடந்துபோன வாழ்க்கையை அலசி ஆராயமாட்டான்

என் அம்மா எப்பவும் நல்லவ என்ற படியாத்தானே தங்கச்சியும் நல்லபடியா படிக்க வைச்சு இருக்கீங்கள்.

மகனின் ஆறுதல் வார்த்தைகளை கேட்ட வள்ளியம்மை கடவுளுக்கு நன்றியை தெரிவித்தாள்.

என் வயிற்றில் பிறந்தவர்களை நல்ல குழந்தைகளாக தந்திட்டியே முருகா.

இத்தனை காலமும் கஷ்ரப்பட்டதுக்கு வழியை காட்டிட் டாயே என சந்தோசப்பட்டாள்.

தன்னோடு தன் தாயையும், தங்கையையும் அழைத்துச் சென்றவன் தன் தாயையும் தங்கையையும் வாழ வைக்க நல்ல தொரு குடிமனையை தெரிவுசெய்து வாழ வைத்தான்.

## 17

தன் தங்கைக்காக விருந்து உபசரிப்பினை முதியோர் இல்லத்திலும், சிறுவர் இல்லத்திலும் நடாத்த திட்டமிட்டான்.

தன் தாயையும் தங்கையையும் அழைத்துச் சென்று விருந்தளித்து முதியவர்களின் ஆசீர்வாதங்களை பெற நினை வத்தவர்கள் மத்தியில் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது.

வயதான ஒரு முதியவர் கையில் கொஞ்சமாக அரிசியை வைத்துக் கொண்டு பறவைகளுக்கு தீனி போட்டுக்கொண்டிருந்தார்.

வித்தியா அந்த முதியவரிடம் போய் “ஐயா, இந்த பலகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்” என்றாள்.

என்னம்மா விசயம்?

நான் பரீட்சையில் பாசாகி விட்டேன்.

எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்துவிட்டது என்றாள்.

வித்தியாவை ஏற இறங்க பார்த்தவர்.

தன் பாட்டுக்கு சிரித்தபடி வாழ்த்துக்கள் என்றாள்.

எனக்கு உந்தப்பலகாரம் வேண்டாம்.

ஏனெண்டா இண்டைக்கு நீங்கள் பாஸ் எண்டிட்டு தருவீங்கள்.

திரும்பவும் சாப்பிட வேணும் எண்டு நினைச்சா நீ வந்து தரவா போறாய்?

இல்லத்தானே? சரி.

ஏதோ இஞ்ச தாறத சாப்பிடவே பிடிக்குதே இல்ல.

சவக்காடு போற எனக்கு ஆகாரம் தான் இல்லாத குறையோ?

மனவிரக்தியில அந்த முதியவர் சொன்ன சொல் வித்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியது.

பாவம் இந்த முதியவர் இவருக்கு நல்ல பிள்ளையள் இருந்தா இப்படி ஏன் கதைக்கிறார்.

கடவுளே எங்கட அப்பா இருந்தா நான் கடைசி வரை வைச்சு காப்பாத்தி இருப்பேனே!

அப்பா வேணும் எண்டு நினைக்கிற எங்களுக்கு அப்பா இல்லை.

அப்பா இருக்கிற பிள்ளைகள் அப்பாமாரை வயசு போன வுடன் முதியோர் இல்லத்துக்கு கொண்டு போய் விடுகினமே.

ம்.. என நினைத்தபடி திரும்பிப் போனவள் அந்த முதியவர் வாயினில் வள்ளியம்மை, வள்ளியம்மை...

எனக்கு பசிக்குது பசிக்குது..."

என தன்பாட்டுக்கு கதைத்தவரைப் பார்த்த வித்தியா செவிமடுத்து ஓடோடிப்போய் அம்மா.. அம்மா அந்தப் பெரிய வரை வந்து பாரேனம்மா உங்கட பேரை சொல்லுறார்.

யார் எண்டு வந்து பாருங்கோ.

தன் தாயாரிடம் கூறிய வித்தியாவின் கதையைக்கேட்டு முதியோர் இல்ல காவலாளிகள் பராமரிப்பாளர்கள் அவளிடம் "அந்த ஐயா அப்படித்தான் எப்பவும் உந்தப் பேரைத் தான் சொல்லுவார்,

அவர் காணமற்போன சங்கத்தில இருந்து விடுபட்ட ஆக்களில ஒருவர்.

அவருக்கு சுய நினைவு இல்ல.

அவருக்கு தான் யார் எண்டு கூட தெரியாம இருக்கார்.

அதால தான் அவரை இஞ்ச கூட்டிக்கொண்டு வந்து விட்டிருக்கு"

இந்த ஐயா எப்பவுமே புறாக்களுக்கு தீனி போடும் போதும் வள்ளியம்மை வள்ளியம்மை எனவும்,

சாப்பிடும் போதும், நித்திரைக்குப் போகும் போது உந்தப் பேரைத்தான் சொல்லிக் கொண்டு இருப்பார் எனக் கூறினார்கள்.

திகைத்துப்போன வள்ளியம்மை கடவுளே அதுவே என்ர புருஷனாக இருந்தா.....!

வா புள்ள வித்தியா எங்க எனக்கு காட்டு'என பரபரப்புடன் ஓடோடிப் போனாள்.

## 18

தன் கணவனை கண்ணார கண்டவளுக்கு சந்தோசம் பொங்கியது. கணவனைக் கண்ட வள்ளியம்மை இஞ்சருங்கோ நான் தான் உங்கட வள்ளியம்மை என அன்புடன் தன்னை அறிமுகப்படுத்தி.

தன் கணவனை குழந்தை போல பாசத்தோடு கட்டி யணைத்தாள் வள்ளியம்மை.

மனைவியின் தொடுகையை உணர்ந்த வாசுதேவனின் சித்தம் தெளிந்தது.

தன் மனைவியின் கண்களை உற்று நோக்கிப் பார்த்தான்.

ஆம்......

என் வள்ளி...

என் வள்ளியம்மை தான்.

இருவரும் ஆணந்தக்கண்ணீரில் தன் அன்பினை பரி மாறினார்கள்.

அங்கே இருந்தவர்களுக்கும் மகிழ்ச்சி வழிந்தோடியது.

அருகே இருந்த வித்தியாவை உங்கள் மகள் தான் என அறிமுகம் செய்தாள் வள்ளியம்மை.

பதினெட்டு வருட இடைவெளியின் பின்...

மகளைக் கட்டித்தழுவி மீண்டும் வாஞ்சையுடன் நெற்றியில் முத்தமிட்டான் வாசுதேவன்.

அம்மாடி என் மகள்.

என் மகளை தனியாக இருந்து நல்ல படியாக வாழ வைத்திட்டாயே வள்ளி என கூறி மனைவியை பெருமையாக புகழ்ந்தான் வாசுதேவன்.

இல்லேங்க பிள்ளை படிச்சு பாஸ் பண்ணியதை விட எனக்கு இப்ப உங்களை கண்டது தான் பெரிய சந்தோசமாய் இருக்கு.

என்ர தலைப்புள்ளைய கண்ட அதிஸ்ரம் போல.

இத்தனை வயசில எனக்கு இப்படியொரு சந்தோசம் கிடைச்சிருக்கே.

நான் கும்பிட்ட கடவுளும் கைவிடேல,

என்ர மகனட அன்பும் பாசமும் தான் இஞ்ச கூட்டிட் கொண்டு வந்து உங்களை காணவும் செய்தது.

எல்லாம் என்ர பிள்ளை வந்த நேரம் தான்.

என்னம்மா நீங்கள் என்னைப்போய் புகழுறீங்கள் உங்களைக் காணவும் இனிவரும் காலம் எல்லாம் உங்கள் எல்லோருடனும் சேர்ந்து வாழும் கொடுப்பனவு வந்ததும் அம்மா உங்கட ஆசீர்வாதத்தால தான்.

உண்மையான பாசம் எப்பவும் அழியாது.

அதுதான் ஏதோ கஸ்ரகாலத்தால கொஞ்சநாளா நாம எல்லோரும் தனித்தனியா பிரிஞ்சு இருந்தோம்.

இப்ப சேர்ந்திட்டம் தானே.

அப்பா நீங்கள் இனி எதையும் நினைத்து கவலைப்படக் கூடாது.

நான் இருக்கேன்.

நீங்களும் நல்ல நிலைமையில் தான் அப்பா இருக் கிறீங்கள்.

நீங்கள் தைரியசாலி, மனதளவிலும் உடலளவிலும் நிறைவாய் இருக்க வேணும்.

உங்கள் எல்லோரையும் கடைசிவரை பார்ப்பது மகனாகிய எனது கடமை.

சேது தனது தந்தையை அரவணைத்து கூறியதைக் கேட்ட வாசுதேவனின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் வழிந்தது.

என் மகன் இத்தனை வயதில் இவ்வளவு பொறுப்பாகவும் அன்பாக வும் பேசுகிறானே.

உண்மையிலே எனது மகனுடன் இருந்தால் யாருக்கும் எந்நோயும் வராமல் காத்திடுவான்.

பெற்றெடுத்த பிள்ளை கூட இந்தளவு ஆறுதலாக கதைக் காததை என்னை தந்தையாக ஏற்று கதைக்கிறானே உண்மை யிலே கடவுள் தந்த கொடை தான் என் இருபிள்ளைகளும் என் மனைவியும் என தன் மனதுக்குள் நினைத்தபடி இறைவனுக்கு தனது நன்றியைச்செலுத்தினான் வாசுதேவன்.

## 19

வள்ளியம்மையின் கடந்தகால வாழ்வுநிலை அறிந்தவன் தான் வாசுதேவன்.

அவளும் தன் கணவனுக்கு உண்மையாகவே வாழ்ந்தவள்.

விதவைப்பெண்ணாக ஏற்று வாழ்வு தந்த தன் கணவனை எண்ணி வாழ்ந்தவள்,

அவளின் மகனையும் நேசித்து அவளையும் நேசித்ததால் வாசுதேவனும் சேதுவை தன் மகனாகவே உச்சி முகர்ந்து அவனும் என் மகனே என நெற்றியில் முத்தமிட்டான்.

தந்தையின் பாசம், முத்தம் என்பதை சிறுவயதில் இருந்து அறியாத சேது, வாசுதேவனை தன் தந்தையாக ஏற்று தன் அன்பை பரிமாறினான்.

இருவருக்கும் புது உறவு உருவானது.

அன்பினாலே வாசுதேவனின் உளநோயும் மாற்றமடைந்து புது மனிதனாக மாறினான்.

வித்தியாவும் அந்த உறவில் தன்னையும் அர்ப்பணித்து உறவுகளை பலப்படுத்தினாள்.

## 20

மறுநாள் புதிதாய் புலர்ந்த காலைப் பொழுதினை வரவேற்றுக்கொண்டு வித்தியா தன் மனதில் “என் தந்தைக்கு மகளாக பிறந்த போது அறியாத வயதில் வாங்கிய முத்தம் என் தாய்க்கு நல்ல தொரு மகளாக வாழ வழி சமைத்தது என்றும்,

கல்வியின் முன்னேற்றப்பாதையில் முன்னேறிய போது என் அண்ணணின் முத்தம் வாழ்வில் மேலும் முன்னேற முயற்சி செய்ய வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்தியது என்றும்,

இறுதியாக என் தந்தையை முதியோர் இல்லத்தினில் கண்டு அப்பாவாக அறிந்து வாங்கிய “மூன்றாம் முத்தம் பந்த பாசங்கள் எப்போதும் அழிவதில்லை என்ற வாழ்க்கை தத்து வத்தை உணர்த்தியது என் வாழ்வினிலே” என சூரிய பகவானுக்கு நன்றிகள் கூறிக் கொண்டு அப்பா, அம்மா, அண்ணன் என்ற பந்த பாசங்களில் இணைந்து தன் சுபீட்சமான வாழ்வை தொடர்ந்து வாழலானாள் வித்தியா.

**முற்றும்.**

## படைப்பாற்றல் :- மனித நேயமுள்ள சிருஷ்டியாளர்



"மூன்றாம் முத்தம்" நூலின் ஆசிரியை செல்வி.மிஷாந்தி செல்வராஜா அவர்கள் அரியாலையூரைப் பிறப்பிடமாகவும் செல்வராஜா கோமளா தம்பதியினரின் மகளும் ஆவார். ஏழு பிறப்பிலும் அழியாச் செல்வமாம் கல்வியை மூலதனமாகக் கொண்டு அதன் பேறாய் ***B.A, M.A in Tamil, Diploma in Pre -School Education*** போன்ற பட்டங்களைப் பெற்று வடமாகாண விவசாய அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தன் கடமையைத் தொடர்கின்றார்.

கற்றாரை மதிப்பதும் உயர் விருதுகளைப் பெற்றாரை போற்றுவதும், நற்றார் முகம் நாடி அவர் தேவை இனங்கண்டு உயர் தொண்டாற்றுவதும் இவர் கொண்ட இலட்சியங்கள் புலத்திலே மூடி மறைந்துள்ள சம்பவங்களை, வெளிச்சத்தில் கொணர்ந்து நிம்மதி நாடும் இயல்பினள். தான் கொண்ட துறைகளாம் எழுத்து, கவிதை, ஓவியம் போன்றவை இவளின் இயல்புக்காய் துணைபோகும் சாதனங்கள் ஆனவை.

நாட்டில் ஏற்பட்ட கொடும் அனர்த்தங்களின் போது சிதறுண்டு போன உறவுகள், நீண்ட காலமாக அப்பிரிவுத் துயரிலே துயில்கின்றன. காலங்கள் கனிந்து வருகையில் அவ்வுறவுகள் சேர்ந்திட நேர்ந்ததும், அவர்களின் உடல், உள உத்தியோக வளர்ச்சிகள் ஒருவரையொருவர் இனங்காண முடியாத அளவுக்கு தோற்றம் பெற்றிருந்தன. இவர்களை உளரீதியில் இணைத்திட உதவிய சூழல்களை மையப்படுத்தி மிகவும் அற்புதமாக இக்கதையைக் காவியமாக்க விளைகின்றார் நூலாசிரியை மிஷாந்தி அவர்கள்.

தனது இளம்பராயத்திலேயே இத்தகைய முதுமை கொண்ட ஆக்கத்தினை அள்ளித்தந்தது இயற்கையை மிஞ்சிய ஓர் செயலே என வியப்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவர் வாழ்வதற்காய் காத்திருக்கும் அதிக காலங்கள் இவர் கொண்ட கலைத்துறைகளில் விடிவெள்ளியாய் ஒளிர்வாள் என்பது வெள்ளிடை மலை.

Print By:-
Mathicolours, Muththiraichanthi 021 222 9285

கிராமசேவையாளர்
பு.தஜிதரன் J/92